**<u>தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்</u>**

எண் : 70

**<u>தேதி : 04.05.2017</u>**

## <u>செய்திக் குறிப்பு</u>

தமிழகத்தில் மின் விநியோகம் தொடர்பாக, சமூக வலைதளத்தில் (WhatsApp) மின்வெட்டு அறிக்கை போன்று தற்போது வதந்தி பரப்பப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் தற்போதைய பூர்த்தி செய்யப்பட்ட மின்தேவை (Demand Met) நாள் ஒன்றுக்கு **15,000** மெகாவாட்டாக உள்ளது. இதனை ஈடுசெய்ய மின் கையிருப்பின் அளவு **17,400** மெகாவாட்டாக உள்ளது. மேலும், காற்றாலை மூலம் **2,000** முதல் **3,000** மெகாவாட் மின் உற்பத்தியும் மற்றும் பகல் நேரங்களில் சூரியஒளி மின் உற்பத்தி மூலம் சுமார் **1,300** மெகாவாட் வரையும் மின் உற்பத்தி உள்ளது. எனவே, தற்பொழுது தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை என்ற பேச்சிற்கே இடமில்லை. மேலும், காற்றாலை மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளதால், மின் கையிருப்பின் அளவு மின் தேவையின் அளவை விட அதிகமாகவே உள்ளது.

எனவே தமிழகத்தில் மின்வெட்டு அறிக்கை போன்று சமூக வலைதளத்தில் (WhatsApp) பரப்பப்பட்டுவரும் வதந்தியை பொது மக்கள் நம்பவேண்டாம். தற்பொழுது தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை என்ற பேச்சிற்கே இடமில்லை.

4/5/17

வெளியீடு – தலைமை மக்கள் தொடர்பு அலுவலகம்,

த.மி.உ.ம.ப.க, சென்னை – 2.